22.10.2025

CC.84/2022

PW–1. முனிஸ்வரன்

(எதிரிகள் 1 முதல் 10 வரையுள்ளவர்கள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை தொடர்ச்சி**

ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். ஜெகன் என்ற ஜெகநாதன், போலிஸ்பாண்டி, வினோத், கதிரேசன், ராஜா, பாண்டியம்மாள், தனலட்சுமி, புவனேஸ்வரி, சரவணதேவி, தவமணி ஆகியோர்கள் ஆவார்கள். ஆஜர் எதிரிகள் ஜெகன், பாண்டியராஜன், வினோத் ஆகியோர்கள் 26.01.2019 அன்று மாலை 4 மணியளவில் நாங்கள் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த போது கதவை தட்டினார்கள். சம்பவ நாளன்று எங்கள் ஊரில் முனியாண்டி கோவில் திருவிழா நடைபெற்றுக்கொண்டிருந்தது. அப்போது நானும் என் சம்பந்தி நாராயணன், அவரது மனைவி தேவசேனா மற்றும் எனது மகன்கள் சுரேஷ்மற்றும் சுரேஷ் ஆகியோர்கள் தூங்கிகொண்டிருந்தோம். கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு எனது மகன் சுரேஷ் சென்று கதவை திறந்த போது எதிரிகள் ஜெகன், வினோத், பாண்டியராஜன் ஆகியோர்கள் கட்டையோடு வீட்டிற்குள் உள்ளே நுழைந்து எனது மகன் சுரேஷ்சை கீழே தள்ளிவிட்டார்கள். சத்தம் கேட்டு நான் வந்து பார்த்த போது எதிரிகள் கதிரேசன் மற்றும் ராஜா ஆகியோர்கள் செங்கல்லால் தாக்கி என்னை கீழே தள்ளிவிட்டார்கள். அதில் எனக்கு வலது பக்க தோள்பட்டையில் எலும்பு விலகிவிட்டது. எனது மனைவி சரோஜா ஓடி வந்து விலக்கவந்தார். மேற்சொன்ன எதிரிகள் எனது மனைவியையும் தள்ளிவிட்டு அவர் கீழே விழுந்ததில் அவருக்கு இடதுகால் பாதத்தில் எலும்பு உடைந்துவிட்டது (Crack). எனது சம்பந்தி நாராயணன் மற்றும் தேவசேனா, தினேஷ் ஆகியோர்கள் ஓடிவந்து பார்த்த போது எதிரிகள் பாண்டியராஜன் மற்றும் வினோத், ஜெகன் ஆகியோர்கள் சேர்ந்து எனது மகன் தினேஷ்சை செங்கல் மற்றும் கட்டையால் இடதுகையில் அடித்ததில் அவருக்கு இடதுகையில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. எதிரிகள் அடித்ததில் எனக்கு வலது தோள்பட்டையில் வலி தாங்கமுடியவில்லை. நாங்கள் ஷேர் ஆட்டோ

மூலமாக கள்ளிக்குடி காவல் நிலையம் சென்றோம். காவல் நிலையத்தில் என்னுடைய சூழ்நிலையை பார்த்துவிட்டு முதலில் நீங்கள் மருத்துவமனைக்கு செல்லுங்கள் என கூறியதின் பேரில் திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்தேன். அங்கு முதல் உதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. மேல் சிகிச்சைக்காக அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு சிபாரிசு செய்தார்கள். நான் எனது விருப்பத்தின் பேரில் மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். அங்கு எனக்கு வலது தோள்பட்டையில் கட்டுபோட்டார்கள். எனது மனைவியை ஆஜர் எதிரிகள் அடித்ததில் மறுநாள் இடதுகால் பாதத்தில் வீங்கிவிட்டது. எனவே நாங்கள் அவரை திருமங்கலத்தில் உள்ள குரு மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை எடுத்துக்கொண்டோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். அந்த புகாரை நான் சொல்ல சொல்ல எனது மகன் சுரேஷ் எழுதினார். அந்த புகாரில் நான் கையெழுத்து போட்டேன். மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் திருமங்கலம் அரசு மருத்துவமனை மற்றும் அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான 26.01.2019ம் தேதியிட்ட திருமங்கலம் அரசு மருத்துவமனையில் விபத்து பதிவேடு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.01.2019 ம்தேதி நேரம் 21.32 க்கான அப்பல்லோ மருத்துவமனையில் என்னை சிகிச்சைக்காக அனுமதித்தற்கான அனுமதி படிவம் (எண்ணிக்கை –2) அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.01.2019ம் தேதியிட்ட அப்பல்லோ மருத்துவமனை பார்மஸி இன்வாய்ஸ் பில் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.01.2019ம் தேதியிட்ட அப்பல்லோ மருத்துவமனையின் மருந்து சீட்டுகள் (Prescription) (எண்ணிக்கை – 2) அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.01.2019ம் தேதியில் எனக்கு அப்பல்லோ மருத்துவமனையில் வலது தோள்பட்டையில் எடுக்கப்பட்ட எக்ஸ்ரே (எண்ணிக்கைகள் –3) அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவ சமயத்தில் நான் திருமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணி செய்து வந்தேன். எனக்கு மேற்படி ஏற்பட்ட காயத்திற்காக 29.01.2019 முதல் 12.02.2019 வரை நான் மருத்துவ விடுப்பை

நீட்டிப்பதற்காக மருத்துவர் கொடுத்த சான்றின் நகல் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**.

ஆஜர் எதிரிகளின் பெயர்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நீதிமன்றத்தில் நிற்கும் 2வது நபரின் பெண்ணின் பெயர் என்ன என்றால் புவனேஸ்வரி. ஆனால் அவரது உண்மையான பெயர் தவமணி என்றால் சரியல்ல. இந்த நீதிமன்றத்தில் நிற்கும் கட்டம்போட்ட சட்டை அணிந்திருக்கும் பெயர் என்னவென்றால் ராஜா. நான் 2019ல் நகராட்சி அலுவலகத்தில் உதவிஅலுவலராக பணியாற்றி வந்தேன். எனது ஊரில் வருடம் வருடம் முனியாண்டி கோவில் திருவிழா நடக்கும். அந்த கோவிலில் எனக்கான முகமை பணி என்னவென்றால் திருவிழா பற்றி மக்களுக்கு விபரங்கள் சொல்வது எனது பணியாகும். சாமிக்கு மாலை தூக்கும் பணியும் எனக்கு உண்டு. அந்த மாலையை தூக்கும் பணி வருடம் வருடம் செய்வேன். அந்த மாலையை அந்த வலது பக்க தோள்பட்டையில் தூக்கி தான் செல்வேன் என்றால் சரியல்ல. சம்பவத்தன்று நான் தோள்பட்டையில் மாலையை துக்கியதால் தான் காயம் என்றால் சரியல்ல. பொதுவாக கோவில் திருவிழா காலங்களில் ஆண் நபர்களுக்கு மதுகுடிக்கும் பழக்கம் உண்டு என்றால் சரிதான். ஆனால் கோவில் திருவிழா காலங்களில் நான் குடிப்பதில்லை. நான் தான் திருவிழாவின் போது மதுகுடித்துவிட்டு வீட்டில் தவறி விழுந்தேன் என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் திருவிழா 2 நாட்கள் நடக்கும். 25.01.2019 மற்றும் 26.01.2019 ஆகிய தேதிகளில் திருவிழா நடந்தது என்றால் சரிதான். எனது புகாரில் திருவிழாவை பற்றி குறிப்பிடவில்லை என்றால் நான் சம்பவத்தை மட்டும் குறிப்பிட்டுள்ளேன். ஆஜர் எதிரிகளுக்கும் நாராயணன் என்பவருக்கும் என்ன சம்பந்தம் என்னவென்றால் தங்கைகள் மற்றும் தங்கையின் கணவர் ஆவார்கள். நான் இந்த வழக்கில் நாராயணன் சம்பந்திகள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் அவர்களுக்குள் குடும்ப பிரச்சினை இருந்தது. நாராயணன் என்பவரது மகளை எனது சுரேஷ் என்ற மகனுக்கு பெண் எடுத்துள்ளேன். ஆஜர் எதிரிகளில் சரவணதேவி என்பவரின் மகளை நாராயணன் மகனுக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். நாராயணன் குடும்பத்திற்கும்

சரவணதேவி குடும்பத்திற்கும் திருமண சம்பந்தமாக உறவுகளில் பிரச்சினை இருந்து வந்தது என்றால் சரிதான். மேற்படி பிரச்சினை சம்பந்தமாக நான் நாராயணனுக்கு ஆதரவாக பொய்யாக எதிரிகள் மீது நடக்காத சம்பவத்திற்கு புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. திருவிழா 25.01.2019 அன்று நான் மாலை 4 மணிக்கு தூக்கினேன். ஆஜர் எதிரிகள் அனைவரும் 26.01.2019 அன்று மாலை 4 மணிக்கு எனது வீட்டிற்கு வந்தார்கள். திருவிழா 25.01.2019 அன்றே முடிந்துவிட்டதால் அன்று இரவே எதிரிகள் அனைவரும் ஊருக்கு சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. மேற்படி ஆஜர் எதிரிகள் அனைவரும் என்னை கம்பு செங்கல்லால் அடித்ததாக சொல்லியதால் அதனை நான் போலிசார் விசாரணையில் எடுத்துக்காட்டினேனா என்றால் எதிரிகள் அடித்துவிட்டு கையோடு கொண்டு சென்றுவிட்டார்கள். கட்டையை கொண்டு எனது வீட்டில் எறிந்தவுடன் கட்டை உடைந்ததா என்றால் இல்லை. கதவு மேல் எறிந்தார்கள். செங்கல்லை வைத்து அடித்த பிறகு செங்கல் என்ன ஆனது என்றால் அதுபற்றி பதற்றத்தில் எனக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. நான் நடக்காத சம்பவத்திற்கு பொய்யாக புகார் கொடுத்து பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நாராயணன் மற்றும் தேவசேனா ஆகியோர்கள் சம்பவத்தன்று எதிரிகள் வீட்டிற்கு சென்றார்கள் ஆமாம். நான் அங்கு போகவில்லை. எனது வீட்டிற்கு 3 பேர் வந்தார்கள் என்றால் 10 பேர் வந்தார்கள். புகாரில் குறிப்பிட்ட தினேஷ் மற்றும் சுரேஷ்க்கு காயம் ஏற்பட்டது. ஆனால் சிகிச்சை எடுக்கவில்லை. எனது சம்பந்தி நாராயணனுக்கும் காயம் ஏற்பட்டது. ஆனால் அவரும் சிகிச்சை எடுக்கவில்லை. நான் காவல் நிலையத்திற்கு சம்பவம் நடந்த ஒரு மணிநேரத்திற்குள் போய்விட்டேன். காவல் நிலையத்திற்கு சென்றேன். புகார் மனு எதுவும் கொடுக்கவில்லை. நான் திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சுமார் 5.30 மணிக்கு சிகிச்சைக்காக சென்றேன். திருமங்கலம் அரசு மருத்துவமனையில் வருகை பதிவேட்டில் பெயரை பதிவு செய்தேனா என்றால் பதிவு செய்தேன். நான் திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு செல்லாமல் நேரடியாக அப்பல்லோ மருத்துவமனைக்கு தான் சிகிச்சைக்கு சென்றேன் என்றால் சரியல்ல. விசாரணை அதிகாரியிடம் திருமங்கலத்தில் சிகிச்சை

எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்கள் அனைத்தையும் போலிசாரிடம் கொடுத்தேன். நான் அவ்வாறு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

நான் அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது கள்ளிக்குடி போலிசார் வந்தார்கள். நான் எழுதி வைத்திருந்த புகார் மனுவை நான் கொடுத்தேன் என்று புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்ல சொல்ல எனது மகன் எழுதியதை தான் நான் கொடுத்ததாக சொல்லியுள்ளேன். நானாக தான் கற்பனையாக புகாரில் எழுதி வைத்தேன் என்றால் சரியல்ல. புகாரில் நான் பெண்கள் பற்றி எவ்வித குறிப்பும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக நான் காயம்பட்டதாக பொய்யாக சாட்சிய ம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான ஆவணங்கள் அனைத்தையும் நான் போலிசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். போலிசார் நான் மருத்துவமனையில் இருக்கும் போது முதல் நாள் விசாரித்து விட்டு புகார் வாங்கிசென்றார்கள். நான் மருத்துவமனையில் டிஸ்சார்ஜ் ஆன பிறகு ஆவணங்கள் கொடுத்தால் போலிசாரிடம் கொடுக்கவில்லை. நாங்கள் தான் எதிரிகள் வீட்டிற்கு சென்று குடும்ப பிரச்சினை சம்பந்தமாக சண்டை சென்றோம் என்றால் சரியல்ல. நாங்கள் தான் அவர்களை தாக்கினோம் என்றாலும் அந்த தாக்குதலுக்கு பயந்து நாங்கள் முன்பே புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் தான் அதன் பிறகு கதவை பூட்டினோம் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் நானே ஏற்படுத்திக்கொண்டது என்று சொன்னாலும் அதனை வைத்து எதிரிகள் ஏற்படுத்தியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகாரில் உண்மை தன்மையில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை